வரு.73 இல. 01 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
32பக்கங்கள் 40/-
2021 ஜனவரி 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 03 Sunday, 2021





இணைந்து பயணிக்கத் தயார் 02



வரவே மாட்டேன்னு சொல்லு 03



அணிதிரளும் அரசியல் சக்திகள் 06

அடுத்த நயன்தாரா பிரியா பவானி சங்கரா ? 18

107 டிப்போக்களில் முழுமையாக பழுதடைந்திருந்த 273 CTB பஸ்கள்;

## கைவிடப்பட்டிருந்த பஸ்களை திருத்தியமைத்து மக்கள் பாவனைக்கு கையளித்த ஜனாதிபதி

### வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் வெற்றிப்படி

முழுமையாக பழுதடைந்த காரணத்தினால் சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 273 பஸ் வண்டிகளை புதுப்பித்து மீண்டும் பயணிகள் போக்குவரத்து



சேவையில் இணைக்கும் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் (31) காலி முகத்திடலில் நடைபெற்றது.இந்த பஸ் வண்டிகள் நாடு முழுவதும் கிராமப்புற வீதிகளில் பயணிகள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த திட்டம் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத பெட்டிகள், மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் ஆலோசனையின் பேரில் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகேயின் வழிகாட்டுதலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் வாகன இறக்குமதி தடைசெய்யப்பட்டது. இதனால், பயணிகள்

04



## நாட்டைப் பிளவுபடுத்துவது எமது நோக்கமே அல்ல



### ஒருமித்த நாட்டுக்குள் தீர்வே தேவை

"நாட்டைப் பிளவுபடுத்துவது எமது நோக்கமல்ல. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள்ளேயே நாம் தீர்வைக் கேட்கின்றோம்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய ஆண்டிலாவது எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில்

04

வெண்ணெய் திரள்கையில் சட்டியை உடைக்கலாகாது;

## ஜனாஸா விடயத்தில் நல்லது நடக்கும் என்பது நம்பிக்கை

### விரைவில் பசிலுடன் பேச்சு என்கிறார் ஹரீஸ்



முஸ்லிம்களின் ஜனாஸா தகனம் விடயத்தில் நல்லது நடக்கும் எனும் நம்பிக்கையுடன் போராடிக் கொண்டிருக்கிறோம். அரசியல் செய்யும் சிலர் இவற்றையெல்லாம் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். வெண்ணெய் திரண்டுவரும் நேரத்தில் சட்டியை உடைக்க சொல்கிறார்கள்.

04

நாட்டில் வைரஸ் பரவல் அதிக ... வதானம்;

## கொரோனா ... ழிக்க மக்களது பூரண ... சியம்







### பொறுப்புடன் செயற்படு ... க்கு அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில் நாட்டிலிருந்து அதனை முற்றாக ஒழிப்பதற்கு அனைத்து மக்களினதும் பூரண ஒத்துழைப்பு அவசியமென்றும் அது தொடர்பில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென்றும் கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயலகத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினமும் பேலியகொடை புதிய பொது சந்தையில் 07 கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நீர்கொழும்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் பிள்ளைகள் மூவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மேலும் 557 வைரஸ் தொற்று நோயாளிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நாட்டில் மொத்தமாக வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்து 856 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது.

பேலியகொடை கொத்தணி மற்றும் மினுவாங்கொடை கொத்தணி ஆகியவற்றினூடான வைரஸ் தொற்று

04

## திருகோணமலை நகரவீதி முடக்கம்



**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மத்திய வீதியில் கொரோனா தொற்றாளர்கள் வெள்ளிக்கிழமை அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து அந்த வீதி முடக்கப்பட்டது. திருகோணமலை நகர் பகுதியில் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில், ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து இக்கடை தொகுதிகளில் பணி புரியும் வேலை ஆட்களுக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

பரிசோதனையில் மேலும் ஆறு பேருக்கு கொரோனா தொற்று

04

மாநகர சபையை நடத்த முடியாத TNA மாகாண சபையை கேட்கிறது

## 9 மாகாணங்களுக்கும் அதிகாரங்களை பிரித்து கொடுத்தால் மத்தியில் ஆட்சி எதற்கு?

### அனைத்தும் மத்தியிலேயே இருக்க வேண்டும் என்கிறார் சரத் வீரசேகர

"ஒரு நாடு ஒரு சட்டம்" என்ற கொள்கையுடன் ஜனாதிபதி செயற்படுகிறார். புதிய அரசிலமைப்பில் மாகாணசபை முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதிகாரங்கள் அனைத்தும் மத்தியில் இருக்க வேண்டும். அதை ஒன்பது மாகாணங்களுக்கு பிரித்துக் கொடுத்தால் மத்தியில் ஆட்சி எதற்கு என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபை ஆட்சியில் அந்தச் சபையை

04







புத்தாண்டை முன்னிட்டு உலகின் மிகவும் உயரமான கட்டடமாக கருதப்படும் புர்ஜ் கலிஃபா கோபுரத்தில் இலங்கையின் தேசியக் கொடி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. புத்தாண்டை முன்னிட்டு பல்வேறு நாடுகளின் தேசியக் கொடிகள் புர்ஜ் கலிஃபா கோபுரத்தில் நேற்று முன்தினம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

04

## எந்தக் கட்சி விலகிச் சென்றாலும் SLPP தனித்து போட்டியிட்டு வெற்றிபெறும்